**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 177/2022**

**2024ம் ஆண்டு ஜுன் மாதம் 24-ஆம் தேதி திங்கட்கிழமை**

**வா.சா.1 ராக்கு**

**கு.வி (பிரதிவாதி தரப்பில்)**

கருப்பணன் அம்பலத்திற்கு பெரியாம்பிள்ளை, வீரணன், சின்னன்னன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பெரியாம்பிள்ளைக்கு நாச்சம்மை, நாச்சி, கருப்பணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பணனுக்கு நான், முனியம்மாள், தவமணி, ராஜா ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வீரணனுக்கு நாச்சி, கருப்பணன், முனிச்சாமி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். வீரணன் மகன் கருப்பணன், கருப்பணன் மகன் முனிச்சாமி என்றால் சரிதான். மேற்படி முனிச்சாமி தான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். சின்னன் என்பவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி நாச்சம்மை, இரண்டாவது மனைவி ஐய்யம்மாள். நாச்சம்மைக்கு வாரிசுகள் கிடையாது. ஐய்யம்மாளுக்கு ஆண்டிஅம்பலமும், கருப்பணன் அம்பலமும் வாரிசுகள் என்றால் சரிதான். நாச்சி, நாச்சம்மை, கருப்பணன் ஆகியவை எங்கள் குலசாமி பெயர்கள் என்றால் சரிதான். இந்த அசல் வழக்குடன் எனது அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்று தனியாக மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் முனியசாமி, கருப்பணன் அம்பலம், காந்திமதி அம்மாள், பி.கே.நாச்சி, சி.ஆண்டி, சி.கருப்பணன் ஆகியோா் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எண் அ.வ.எண்.86/2013 என்றால் சரிதான். அந்த வழக்கில் இரண்டு இலக்க சொத்துக்களை சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருந்தேன். அதில் 1ம் லக்க சொத்து சா்வே எண் 242/3, 242/6, 242/7 ஆகிய மூன்று சொத்துக்களை சேர்த்து 1ம் லக்கமாக காட்டியிருந்தேன். அதன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கா் 8 செண்டு ஆகும். அந்த வழக்கை நான் தொடா்ந்து நடத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மீண்டும் அந்த வழக்கை கோப்பிற்கு எடுக்க மனு தாக்கல் செய்தேன் என்றால்

சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தள்ளுபடி உத்திரவின் மீது நான் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்திரவின் மீது நான் எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தைப் பொறுத்து ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 ஆக எஸ்.எல்.ஆர் உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன். அதில் சர்வே எண் 242/3 கருப்பணன் அம்பலம் மகன் பெரியாம்பிள்ளை பாகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. அதில் பாகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 242/6 கருப்பணன் மகன் வீரணன் அம்பலம் பாகம் என உள்ளது சுழிக்கப்பட்டு பெரியாம்பிள்ளை பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 242/7 கருப்பணன் மகன் சின்னன்னன் என்பது சுழிக்கப்பட்டு பெரியாம்பிள்ளை பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எஸ்.எல்.ஆரில் உள்ள 3 சர்வே எண்களின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 8 செண்டு ஆகும். வா.சா.ஆ.2 ஆக பாப்பாத்தியம்மாள் பெயரில் உள்ள ஒத்தி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஒத்தி ஆவணத்தில் நான்குமாலில் சின்னன்னன் பொத்தவை செய்யுக்கும் தெற்கு, வீரணன் அம்பலம் பொத்தவைசெய்யுக்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீரணன், சின்னன்னன் ஆகியோர் பெரியாம்பிள்ளையின் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் பாப்பாத்தி அம்மாளின் ஒத்தி மேடோவர் ஆவணத்தை வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் வா.சா.ஆ.2ல் உள்ள நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வா.சா.ஆ.4 ஆக கருப்பணன் அம்பலமும், நாச்சி அம்பலமும் சர்வே எண் 242/3 ல் 1 ஏக்கர் 8 செண்டில் 38 செண்டு மட்டும் ஒத்தி கொடுத்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஒத்தியிலும் மேற்படி நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஒத்தி ஆவணங்கள் பற்றி தெரியும். அதில் உள்ள நான்குமால்கள் தெரியாது. எனக்கு மேற்படி ஒத்தி பத்திரத்தில் உள்ள நான்குமாலை

தெரிந்துகொண்டு வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் ஆகும். 1 ஏக்கர் 8 செண்டு எனது தந்தை தானமாக கொடுத்தார். எனது அப்பாவிற்கு 35 செண்டு மட்டும் தான் பாத்தியம் என்றும் 1 ஏக்கர் 8 செண்டு பாத்தியமில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா எழுதிக்கொடுத்த 1 ஏக்கர் 8 செண்டிற்கு பட்டா எனது பெயரில் மாற்றிவிட்டேன். என் பெயரில் உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா சர்வே எண் 242/7 ல் 36 செண்டு தானமாக எழுதிக்கொடுத்துள்ளார். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ,6 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 36 செண்டு 1 ஏக்கர் 8 செண்டில் அடங்காது. வா.சா.ஆ.7 ஆவணம் நான் 2ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். சர்வே எண் 242/7 ல் 36 செண்டு நான் தானமாக எனது தம்பிக்கு எழுதிக்கொடுத்துள்ளேன். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் தெற்கு எல்கையாக வாய்க்கால் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாய்க்கால் சர்வே எண் 242/3, 242/6, 242/7 ஆகியவற்றிற்கு தண்ணீர் பாயக்கூடியது என்றால் சரிதான், அந்த வாய்க்கால் கண்மாய் வரை செல்கிறது. வா.சா.ஆ.8 பட்டா சர்வே எண் 242/7 விஸ்தீரணம் 36 செண்டிற்கு உரியது. மேற்படி 36 செண்டு 1 ஏக்கர் 8 செண்டில் அடங்காது. வா.சா.ஆ.9 பி.கே.நாச்சி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 69/22 ன் பிராது என்றால் சரிதான். அந்த வழக்கு சர்வே எண் 242/3 35 செண்டிற்கு உரியது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பி.கே. நாச்சி மேற்படி சொத்து அவருக்கு பாத்தியம் என பரிகாரம் கேட்டுள்ளார். கருப்பணன் அம்பலம் மகன் சின்னன்னன் அம்பலம் அவரது முதல் மனைவி நாச்சம்மை என்றால் சரிதான். மேற்படி நாச்சம்மைக்கு வாரிசுகள் இல்லை. சின்னன்னன் அம்பலம் உயிருடன் இருக்கும்பொழுது முதல் மனைவி நாச்சம்மைக்கு சர்வே எண் 242/3 விஸ்தீரணம் 35 செண்டை நாச்சம்மை பெயரில் பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி நாச்சம்மை சர்வே எண் 242/3 ல் 35 செண்டை பி.கே.நாச்சிக்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. பி.கே.நாச்சி பெயரில் உள்ள கிரையத்தை ரத்து செய்ய நான் பரிகாரம் கேட்டுள்ளேன். நான் அந்தமாதிரி பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு 69/22 ல்

தாக்கல் செய்த எதிர்கோருரிமை வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு தாவா சொத்து பாத்தியம் இல்லை என்பதால் எனது எதிர்கோருரிமை ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கருப்பணன் அம்பலமும் அவரது மனைவி காந்தியம்மாளும் முனிச்சாமிக்க எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் .அதன் சர்வே எண் 242/6 விஸ்தீரணம் 36 செண்டு என்றால் சரிதான். நான் சர்வே எண் 242/3 மற்றும் 242/7 க்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால் 242/6 முனிச்சாமிக்கு அவரது அப்பா, அம்மா எழுதிக்கொடுத்தது சரிதான் என்றால் சரியல்ல. சர்வேஎண் 242/3, 242/6, 242/7 மூன்றும் சேர்த்து தான் 1 ஏக்கர் 8 செண்டு என்றால் சரியல்ல. எனது அப்பாவின் அப்பா பெரியம்பிள்ளைக்கு சர்வே எண் 242/7 ல் 36 செண்டு மட்டும் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. நான் புகார் மனு ரசீதை வா.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனு இடப்பிரச்சனை என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள மனு முடிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சர்வே எண் 242/6க்கு செல்லக்கூடிய அரசு வாய்க்காலை அழித்ததால் என் மீது 1ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 எஸ்.எல்.ஆர் ஆவணம் மோசடியாக திருத்தப்பட்டு அதன் அடிப்படையில் நான் 1 ஏக்கர் 8 செண்டை பொறுத்து மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**சார்பு நீதிபதி**
**மானாமதுரை**